தீ.ம.மே.மா கருப்பொருள் (2017-2019): எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட கருப்பொருள் (2016-2020):

## திருச்சபை குடும்பங்களின் ஒன்றியம்

பிப்ரவரி துணை கருப்பொருள்: எதிர்நோக்கம்:

## மனிதத்தன்மையில் கடவுளின் கொடையை வரவேற்றல்

அறிமுகம்: ‘‘எதிர்நோக்கு கடவுளின் கொடையாகும். இக்கொடையைப் பெற முயற்சிக்க வேண்டும். நம் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்துக் கொள்ள, இக்கொடையை நம் உள்ளத்தில் பதிய வைக்கப்பட்டுள்ளது. எதிர்நோக்கு குணத்தை வளப்படுத்தும் போது நல்ல பலன் தரும். குறிப்பாக கடவுளிடம் நெருக்கம் மற்றும் இரக்கம்…..’’

(பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மறையுரை, 6 நவம்பர் 2016)

## உரையாடல்

‘‘கடவுள் தவறு செய்யமாட்டார் என்பது நிச்சயம் ஆனால் அவர் அற்புதங்கள் புரிவார்’’. இறை அற்புதத்தின் விளைவுதான் நான், நீங்களும் தான். இது நிக்கலஸ் ஜேம்ஸ் அவர்களின் அறிக்கை. ‘‘நிக்’’ விஜிசிக் என்ற இவர் பல லட்சம் பேரை கவர்ந்துள்ளார். பலருக்கு உந்துசக்தியாக விளங்கியுள்ளார். 10 வயது சிறுவனாக இருந்தபோது, தனது வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணிய இவரின் எதிர்நோக்குள்ள வார்த்தைகளை கேட்கின்றவற்கு வியப்பாகதான் இருக்கும்.

ஆஸ்திரேலியாவில் பிறந்த நிக் பல முகங்களைக் கொண்டவர். இவர் ஒரு தன்முனைப்பு பேச்சாளர், பட்டதாரி, எழுத்தாளார், கிறிஸ்துவ போதகர், கணவர், தந்தை இத்தனை முகங்கள் கொண்ட இவருக்கு கைகளும் கால்களும் இல்லை. உடல் வளர்ச்சி குன்றிய குறைபாடுடன் பிறந்தவர். ஓர் அரிய வகை நோய் இவருக்கு.

இவரின் பெற்றோர்கள் Dushka-வும் தாயார் Boris-சும் மகனின் நிலையைக் கண்டு மனம் துவலாமல் முன்நோக்கி செல்வதற்கு ஊக்கம் அளித்தனர். இவரின் விசுவாசமும் தன்னம்பிக்கையும் இவரை உச்சத்தில் நிறுத்தியது. ‘‘கடவுளின் திட்டம் என்ன என்று எனக்கு புரியவில்லை என்றாலும், கடவுள் என்னுடன் இல்லை என்று அர்த்தமாகாது’’. கொஞ்சமும் எதிர்பாராமல் பிறந்த தங்கள் ‘‘சிறப்பு குழந்தை’’ குறித்து துயரமும் அச்சமும் கொண்டனர். இக்குழந்தையை வளர்த்தெடுக்கும் சிந்தனை இவர்களின் விசுவாசத்தையும் பாதித்தது.

ஆனால் தங்களின் ‘‘சிறப்பு குழந்தை’’ பற்றிய எண்ணத்தை மாற்றிக் கொண்ட போது கேள்வி குறியாக இருந்த விசுவாசம் இவர்களுக்கு பலமானது. இறைவனின் அருளாலும் ஞானத்தாலும் இறை மகிமையாலும் தங்கள் குழந்தையை வளர்த்தார்கள். ‘‘உங்களுக்கு கால்கள் இல்லாமல் இருக்கலாம், ஆனால் உங்களால் என்ன செய்ய முடியும் அல்லது முடியாது என்பதை உங்கள் உடலின் குறைபாடு நிர்ணயம் செய்யக் கூடாது’’.

‘‘பயன் அற்றவன் பெற்றோருக்கு சுமை’’ என்று எண்ணிய காலம் முதல் அவரது பயணம் தொடங்கியது. மற்றவர்களை விட பலவற்றை அவரால் செய்ய முடிந்தது. நீச்சல், மீன் பிடித்தல், பனி விளையாட்டு, முக்குளிப்பு! 58 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த பயணத்தில் மூன்று மில்லியன் மைல்கள் கடந்துள்ளார். இப்பயணம் வழியாக வாழ்வை வெறுத்த பலருக்கு எதிர்நோக்கு அளித்துள்ளார்.

சில சமயங்களில் ஆற்றல் மிக்க செய்திகள் எளிமையான வார்த்தைகளில் வெளிப்படுகிறது. ‘‘உங்கள் நன்மைக்காக அன்றி, கடவுள் வேறு எதையும் உங்கள் வாழ்வில் அனுமதிப்பதில்லை’’ வாழ்க்கை சோதனை நிறைந்தது, என்பதை நிக் மறுக்கவில்லை. உங்கள் வாழ்க்கையை எந்த வழியிலாவது அரவணைத்துக் கொண்டு, தேவையானவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

நிக் ஒரு தனிப்பிறவி. கடவுளின் கருவி. வரம்பையுடம் மீறி வாழ்கின்றவர். விடாமுயற்சியை செய்தியாக நமக்கு தருகிறார். நிக் தமது அழைப்பையும், பொறுப்புக்களையும் மற்றும் பணியையும் அரவணைத்துக் கொண்டார். ‘‘உங்களை நம்புகின்ற ஒருவர் இருக்கிறார், நீங்கள் இருக்கும் நிலையிலேயே அன்பு செய்கிறார், என்ற தெளிவான எண்ணம் உங்களுக்கு உண்டு.

சிந்தனைக்கு

- நிக் வாழ்க்கை கதையில் உங்கள் மனதைத் தொட்ட இரண்டு கருத்தினைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
- வேலையிடத்தில், அக்கம்பக்கத்தில், குடும்பத்தில் எவ்வாறு நீங்கள் எதிர்நோக்கு அளிக்கும் ஒருவராக இருந்த அனுபவத்தை பகிர்ந்துக் கொள்ளவும்.

## உணர்வு

வாசகம் : 2 திமொத் 2 : 13 -17

1. தூய ஆவியாரை நோக்கி செபியுங்கள்.

   (மனம் திறந்து இறை இயேசுவை சந்திக்கவும், அவரால் ஆட்கொள்ளப்பட்டு வல்லமைப்பெற)

2. வாசகப் பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும்.

(ஓவியங்கள், படங்கள், காணொளி, நாடக வடிவம் போன்றவைகளைப் பயன்படுத்தலாம்.....)

3. இறைவார்த்தையில் நிலைத்து அமைதியாக இருக்கவும்.

4. எந்த வார்த்தைகள், வசனங்கள் அல்லது கருத்துக்கள் என் மனதைத் தொட்டது?

5. தூய ஆவியானவர் கூறும் செய்தி என்ன அல்லது எனக்கு கூறும் செய்தி என்ன?

## செயல்கள்

a) சிறிய குழுவில் பகிர்ந்துக் கொள்ளவும் (3-4 பேர்கள்) மேலேயுள்ள 4+5-ம் எண் கேள்விகள் குறித்து.
b) பெரிய குழுவில் 2 அல்லது 3 கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
c) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் செய்யக்கூடிய ஓர் காரியத்தைத் தேர்வு செய்ய உதவ வேண்டும்.
d) வழி நடத்துபவர்கள், இறைமக்கள் தேர்வு செய்த காரியம் குறித்த விஷயங்களைக் சேகரிக்க உதவலாம். (மற்றவர்களுக்கு எதிர்நோக்கு அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். நடைமுறை படுத்தும் நாளை முடிவு செய்ய வேண்டும்).
e) செபிக்கும் நேரம் (தேர்வு செய்த காரியத்திற்காக செபிக்கவும்).

வழிநடத்துனரின் கவனத்திற்கு:

i) புத்தாக்க/ மாற்று வழி/ பங்கு கொள்ளும் வழியினைப் பயன்படுத்தலாம்.
ii) தலைப்பின் கருப்பொருள் மற்றும் உரையாடல் / உணர்வு பகுதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை மனதில் கொள்ளவும்.
iii) 4D (தடுத்தாட்க் கொள்ளப்பட்ட, வல்லமைப்பெற்ற, தெளிவுப்பெற்ற, மறைப்பரப்பு) ஆகியவற்றை நினைவிற்க் கொள்ளவும்.
iv) 3D (உரையாடல், உணர்வு, செயல்கள்) ஆகிய மூன்று பகுதிகளையும் பங்கெடுப்பாளர்களுக்கு அர்த்தமுள்ளதாக இருக்க விரிவாக ஆராயவும்.

இறுதிப்பாடல் (பொருத்தமான பாடலைத் தேர்வுச் செய்யவும்).